முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved

**மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்**
**Provincial Department of Education, Eastern Province**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) முன்னோடி கணிப்பீடு 2023(2024)
**General Certificate of Education (Ord. Level) Pilot Assessment, 2023(2024)**

| | | |
|---|---|---|
| தமிழ் இலக்கியநயம்<br>Tamil Literature | 48 T | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம்<br>Three Hour and 10 Minutes |

சுட்டெண் : ............................ **புள்ளிகள்**

- ❖ இவ் வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- ❖ முதலாம் வினாப்பத்திரத்திற்கு இப்பத்திரத்திலேயே விடையளித்தல் வேண்டும்
- ❖ முதலாம் வினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகளும் இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு 60 புள்ளிகளும் வழங்கப்படும்.
- ❖ முதலாம் வினாப்பத்திரத்தில் இரண்டு வினாக்களுக்கும், இரண்டாம் பத்திரத்தின் முதலாம் வினா உட்பட, ஏனைய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

## பகுதி I

**01. (1) தொடக்கம் (5) வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக**

01. தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும் சையோகம்
புரிந்ததொரு வேளை தன்னில்
இனித்த புவி இயற்கை யெழில் எல்லாம் கண்டேன்

(அ) "சையோகம்" என்பதன் பொருள் யாது?

..................................................................................................................................

..................................................................................................................................

(ஆ) புத்தக வாசிப்பினூடாக கவிஞர் பெற்ற அனுபவங்கள் எவை?

..................................................................................................................................

..................................................................................................................................

02. "பாலைப் பண் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனதையும் மாற்றி ஆயுதங்களை கீழே போட்டு விடச் செய்யும்"

(அ) இக்கூற்று யாரால்? எந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

..................................................................................................................................

..................................................................................................................................

(ஆ) பாலைப்பண்ணின் தன்மை எத்தகையது?

..................................................................................................................................

..................................................................................................................................

03. முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழா அது உடீஇக்

(அ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

..........................................................................................

..........................................................................................

(ஆ) தலைவன் மீது தலைவி கொண்ட அக்கறை எவ்விதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

..........................................................................................

..........................................................................................

04. "கெண்டை கெண்டை யெனக் கரை ஏறினாள்
கெண்டை காண்கிலள் நின்று தயங்கினாள்."

(அ) பெண்ணின் கண்களின் அழகு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?

..........................................................................................

..........................................................................................

(ஆ) பெண் மயங்கி நின்றமைக்குக் காரணம் என்ன?

..........................................................................................

..........................................................................................

05. "இன்று வரை அம்மா
கதவுகளின் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்...."

(அ) அம்மா இன்று வரை கதவுகளின் பின்னிருந்து பேசுவதற்கான காரணம் யாது?

..........................................................................................

..........................................................................................

(ஆ) இவ்வரிகளினூடாக கவிஞர் எதனைக் கூற முற்படுகின்றார்?

..........................................................................................

..........................................................................................

**02. கீழ்காணும் உரைப் பகுதியை அல்லது செய்யுட் பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக**

உங்களுக்கு எப்படி புரியும் காதலும் பிரிவும், எனக்கா காதலைத் தெரியாது. பாறைக்குள் ஒளிந்திருக்கும் சுனைநீரின் ஊற்றைப் போல் அக்காதல் நினைவுகள் இன்னும் என் ஆழ்மனதுள் சுரந்து கொண்டுதான் இருக்கின்றன.

உனக்குத் தெரியுமா மகளே வயலுக்கு நீர் அளந்து விடுவதில் வல்லவனும் நீர்க்காரனுமான என் பாட்டன், பெருநிலம் கடக்கும் வணிக ஊர்திகளின் கோல்க்காரன் ஆனான். என் முதாய் சமையற்காரியானாள். என் தாய்வழிப் பாட்டியின் கைப்பக்குவம் என் சமையலில் இருப்பதாக எல்லோரும் சொன்னார்கள். நான் சமைக்கும் உலர் மீன் பாகருக்கும் ஊன் சுவை அடிசிலுக்கும் மயங்கிய ஒரு கோல் காரன் என் பின்னே சுற்றிச் சுற்றி வந்தான். அவனுக்கு என்னை அளித்தேன் நாம் இருவரும் ஈருடல் ஒருயிராய் வாழ்ந்தோம். நிலவற்ற ஓர் இரவில் திடீரென பெருங்கூச்சல். கள்வர்கள் கூட்டமொன்று எங்களைத் தாக்கத் தொடங்கியது. என் காதல் கொழுநன் வாள் வீசுவதில் வல்லான். சுதாகரித்துக் கொண்ட அவன் கள்வர்களை எதிர்த்து தாக்கினான். கள்வர்கள் எண்ணிக்கையில் அதிகமானவராக

இருந்ததனால் மெல்ல மெல்ல எங்கள் தற்காப்பு குலைந்தது. வணிகப் பொதிகள் சூறையாடப்பட்டன. பெண்கள் சிறைபிடிக்கப்பட்டனர்.

வேல் கம்பு பாய்ந்த என் காதல் கொழுநன் நெஞ்சில் குருதி கொப்பளிக்க இதோ என் மடியில் தான் தன் இன்னுயிரை மாய்த்தான். என் மடியில் ஓடிய அவன் குருதியின் வெப்பத்தை நான் இன்றும் உணர்கிறேன்.

சிறைபிடிக்கப்பட்ட நாங்கள் புகார் நகரில் அடிமைகளாக விற்கப்பட்டோம். என்னை விலைக்கு வாங்கிய உமது பாட்டன், உன் தந்தை மாநாயக்கனின் திருமணப் பரிசாக அளித்தான். அன்றிலிருந்து நான் உங்களது உரிமை மக்கள்.

(1) காவல் பெண்டுவின் காதல் நினைவுகளை வெளிப்படுத்தும் அணியினைக் குறிப்பிட்டு விளக்குக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(4 புள்ளிகள்)

(2) காவல் பெண்டுவின் பாட்டனின் திறமைகளைக் குறிப்பிடுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(4 புள்ளிகள்)

(3) "என் மடியில் ஓடிய அவன் குருதியின் வெப்பத்தை நான் இன்றும் உணர்கிறேன்". இவ்வரிகளில் காவற் பெண்டுவின் எவ்வுணர்வு, எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(6 புள்ளிகள்)

(4) காவற்பெண்டு உரிமை மக்களான விதத்தைக் குறிப்பிடுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(6 புள்ளிகள்)

(4 + 4 + 6 + 6 =20 புள்ளிகள்)

**அல்லது**

தேன் நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங் கியே கிடந்ததைக் கண்டு
தான் அதை சம்பு வின் கனி என்று
தடம் கையில் எடுத்து முன் பார்த்தாள்
வான் உறு மதியம் வந்தது என்று எண்ணி
மலர்க்கரம் குவியுமென்று அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
புதுமையோ இது என புகன்றாள்

(1) வண்டு மயங்கிக் கிடந்தமைக்குக் காரணம் என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(4 புள்ளிகள்)

(2) மங்கை எதனை, எதுவாகக் கருதி தனது கையில் எடுத்துப் பார்த்தாள்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(4 புள்ளிகள்)

(3) வண்டு எதனைக் கண்டு பயந்து, பறந்து சென்றது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(6 புள்ளிகள்)

(4) மங்கை புதுமையாகக் கருதிய விடயம் என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(6 புள்ளிகள்)

(4+4+6+6 =20 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.**

**01)** பின்வரும் கவிதையை வாசித்து, அதன் கீழ்த்தரப்பட்டுள்ள தொடர்களின்/ வழிகாட்டற் குறிப்புக்களின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் 200 சொற்களில் எழுதுக.

'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்'.
நேசமாமரியா மக்த லேநா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்
தேசத் தீர் இதன் உட்பொருள் கேளீர்
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாச மின்றி நமை நித்தங் காப்பார்
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்

அன்புகாண் மரியா மக்த லேநா
        ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
        மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்
பொன்பொ லிந்த முகத்தினிற் கண்டே
        போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை
அன்பெனும் மரியா மக்த லேநா
        ஆஹா! சாலப் பெருங்கிளி யி∴தே

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
        உணர்வை ஆணித் தவங்கொண்டடித்தால்
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
        வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மைகாண் மரியா மக்த லேநா
        பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
        நொடியி லி∴து பயின்றிட லாகும்.

அ. இக் கவிதை எழுந்த பின்னணி

ஆ. இயேசுநாதரின் சிறப்புக்கள்

இ. இயேசு கிறிஸ்துவின் மூன்றாம் நாள் உயிர்ப்பு

ஈ. மரியா மக்தலேநாவின் சிறப்புக்கள்

உ. அணிப்பிரயோகம் (30 புள்ளிகள்)

**02) பெருமரமாகிப் போனதொரு வாழ்வு என்ற கட்டுரையில்**

அ. பாலுமகேந்திராவின் தனித்துவமான ஆளுமைகள்

ஆ. தமிழ்ச் சினிமாத்துறையில் அவரது சாதனைகள் (15 புள்ளிகள்)

**03) திருக்குறள் நலம் புனைந்து உரைத்தல் அதிகாரத்தில் தலைவியின்**

அ. தலைவியின் மென்மைத் தன்மை

ஆ. அழகு நயம் என்பன எடுத்துக்காட்டப்படுமாற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

**04) தாய்ப்பசு சிறுகதையில்**

அ. தாய்மையுணர்வு வெளிப்படும் விதம்

ஆ. காளை, குமரனைத் தாக்குவதற்குக் காரணமாக அமைந்த சம்பவங்கள் (15 புள்ளிகள்)

**05) வாய்மொழிப்பாடல் பகுதியில்**

அ. மருத்துவிச்சியின் மனப்பாங்கு

ஆ. மருத்துவிச்சியின் வாழ்த்து என்பவற்றைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)